**கட்டுரையில் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான இனிய தொடர்கள்.**

1. உள்ளத்தனையது உயர்வு.
2. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.
3. எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு.
4. காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு.
5. இன்று அரும்பும் மொட்டுக்களே நாளை மணம் பரப்பும் மலர்கள்.
6. இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை.
7. நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்.
8. அத்தி பூத்தாற் போல
9. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனினும் அரிது கூன் குருடு நீங்கிப் பிறத்தல் அரிது.
10. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.
11. இல்லாரை எல்லோரும் எள்ளுவர், செல்வரை எல்லோரும் செய்வர் சிறப்பு.
12. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே.
13. ஒருவர் பொறை இருவர் நட்பு.
14. உடுக்கை இழந்தவன் கைப்போல
15. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு,
    மாடல்ல மற்ற யவை.

16. கல்வி அறிவையும் கேள்வி அறிவையும் இணைத்துக் கொள்பவனே விரைவில் அறிஞன் ஆகிறான்.

17. கனவு நனவாக கடும் உழைப்பு வேண்டும்.

18. புகைத்துப் புகைத்து விரைவில் உன்னைப் புகைத்து விடாதே.

19. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண, நன்னயம் செய்து விடல்.

20. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை.

21. வரலாற்றைப் புரட்டினால் / வாழ்க்கை என்னும் ஏட்டைப் புரட்டினால்......

## பொருத்தமான தொடர்கள் - மேற்கோள்கள்

1. சிந்தனைகள் சாதனைகளாகின்றன.

2. இலட்சியங்கள், குறிக்கோள்கள் போன்றவையே சாதனைகளுக்கு வித்திடுகினறன.

3. சாதனையாளன் பிறப்பதில்லை ; உருவாகிறான்.

4. சாதனைகள் இமயமலையைப் போல பிரமிப்பூட்டும் வண்ணம் இருக்கலாம் அல்லது அவரவர் நெஞ்சங்களுக்கு மட்டுமே தெரிந்த ஒன்றாகக் கூட இருக்கலாம்.

5. அரிய காரியங்கள் செய்ய வேண்டும்.

6. நாடென செய்தது உனக்கு எனக் கேள்விகள் கேட்பது எதற்கு? நீ என்ன செய்தாய் அதற்கு என நினைத்தால் நன்மை உனக்கு.

7. “ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
   சான்றோன் எனக் கேட்ட தாய்”

8. சாதிப்பவனே நற்குடிமகன் ; மானிடனாகப் பிறந்த முழுப் பயனை அடைகிறான்.

9. இலக்கு இன்றி நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ள இயலாது.

10.வெற்றிக் கொடி கட்டு................. (பாடல் வரி)

11.கடமையைச் செய் ; பலனை எதிர்பார்க்காதே!

12.முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

13.உன்னால் முடியும் தம்பி தம்பி, உனக்குள் இருக்கும் உன்னை நம்பி.

14.எண்ணத்தில் மிதந்தேன், கற்பனை உலகத்தில் மிதந்தேன்.

15.நிலைக்குத்தி நின்றேன், சிலையாய் நின்றேன்.

16.கண்ணுக்கு இன்பம், செவிக்கு இன்பம்.

17.கண்கள் சிவந்தன, கோபக்கனல் வீசியது.

18.முத்துப்போன்ற வியர்வை துளிகள்.

19.மனதில் புத்துணர்ச்சி பிறந்தது.

20.முதலைக் கண்ணீர் வடித்தாள்

21.முகத்தில் ஈ ஆடவில்லை

22.அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

23.தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

24.மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

25.ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமோ?

26.உதவிக்கரம் நீட்டினேன்.

27.நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்.

28.காலச் சக்கரம் சுழன்றது.

29.அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்.

30.செவிடன் காதில் ஊதிய சங்கு போல

## கட்டுரையில் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான மரபுத்தொடர்கள் மற்றும் இணைமொழிகள்

| | |
|---|---|
| கண்மூடித்தனம் | இடங்கொடுத்தல் |
| ஒரு கை பார்த்தல் | எடுத்த எடுப்பில் |
| ஆறவமர | தலைமேற்கொள்ளுதல் |
| குரங்குப்பிடி | நிலை நாட்டுதல் |

| | |
|---|---|
| கை கழுவுதல் | ஈடேறுதல் |
| அன்றும் இன்றும் | கழுத்தில் கட்டுதல் |
| அல்லும் பகலும் | விருப்பு வெறுப்பு |
| அருமை பெருமை | ஆக்கமும் ஊக்கமும் |
| குறை நிறை | கரையேறுதல் |
| ஆணித்தரம் | வெட்டிப் பேச்சு |
| மனக்கோட்டை | கானல் நீர் |
| தலையிடுதல் | கல்வி கேள்வி |
| தப்பும் தவறும் | நிறை குடம் |
| விழிபிதுங்கி | மெய் மறந்து |
| உச்சி குளிர்ந்து | முகம் கறுத்து |
| திக்கு முக்காடி | புத்தகப் புழு |
| இல்லாததும் பொல்லாததும் | வெள்ளை மனம் |
| கொட்டமடித்தல் | கள்ளம் கபடு |
| சட்ட திட்டம் | செவி சாய்த்து |
| பகல் கனவு | தட்டிக் கழித்தல் |
| உற்றார் உறவினர் | கனவோ நனவோ |
| பேரும் புகழும் | சீரும் சிறப்பும் |